ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2109/30 - 2019 පෙබරවාරි මස 08 වැනි සිකුරාදා - 2019.02.08
*2109/30 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: மீரி/பி.செ/காணி/3/2016/05.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4 -3/2/2016/CEB/24.

ஒரு பொதுத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியாளர் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மேல்மாகாணத்தில், கம்பஹா மாவட்டத்தில், மீரிகம பிரதேச செயலகப் பிரிவில், மெதபத்துவ உப பிரிவில் உடுகம கிராமத்தில் நில அளவையாளர் நாயகம்சார்பாக கம்பஹா மாவட்ட சிரேஷ்ட நில அளவையாளரினால் 2018.10.05 ஆந் திகதியன்று பிரிக்கப்பட்டு வரையப்பட்டுள்ள 510243 என்ற இலக்கத்தைக் கொண்ட நில அளவை வரைபடத்தின் வலய இலக்கம் 01 வரைபட பத்திர இலக்கம் 17 இல் காணித் துண்டு இலக்கம் 928 முதல் 929 வரை காட்டப்பட்டுள்ள 0.9291 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய 02 காணித் துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு :

1. **துண்டு இல. 928**

காணியின் பெயர் : கந்துறுகஹலந்த ; விபரம் : தோட்டம், பல்வகைப்பட்டபயிர்கள்; உரிமை கோருபவர்: அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர் : கே. எஸ். தர்மவதி பீரீஸ், இலக்கம் 25, உடுகம, வெயாங்கொடை (330 என்ற இலக்கம் கொண்ட காணித் துண்டின் பகுதி) ; விஸ்தீரணம் : 0.1334 ஹெக்டயார்.

2. **துண்டு இல. 929**

காணியின் பெயர் : கந்துறுகஹலந்த ; விபரம் : வீட்டுதோட்டம் ; உரிமை கோருபவர்: அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர் : கே. எஸ். தர்மவதி பீரீஸ், இலக்கம் 25, உடுகம, வெயாங்கொடை (330 என்ற இலக்கம் கொண்டகாணித் துண்டின் பகுதி) ; விஸ்தீரணம் : 0.7957 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 06 ஆந் திகதி மு. ப. 9.30 மணிக்கு மீரிகம பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 25 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வை. ஐ. எம். சில்வா,
பிரதேச செயலாளர் மற்றும்
காணி எடுத்தல் அதிகாரி,
மீரிகம.

பிரதேச செயலகம்,
மீரிகம,
2019, சனவரி 18.

02 - 864

1A - G 29426 - 12 (2019/02) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.
*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*